செய்தி வெளியீடு எண். 39-2018 நாள்: 20.02.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் நேரடி கொள்முதல் நிலையம், நடமாடும் கொள்முதல் நிலையம் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் தங்களது விளைப்பொருட்களை விற்பனை செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டம் தமிழகத்தில் அதிகப்படியான நிலப்பரப்பு மற்றும் விவசாயிகளை கொண்ட மாவட்டம், நமது மாவட்டம் தமிழகத்தின் மொத்த உணவு உற்பத்தியில் 10 சதவிகிதத்திற்கு மேல் தனது பங்காக கொடுத்து வருகிறது.

விவசாயிகளின் நலன் கருதி விவசாயிகள் விளைவித்த நெல்லினை அரசு நிர்ணயம் செய்த ஆதார விலைக்கு விற்பனை செய்திட விழுப்புரம் மாவட்டத்தில் சின்னசேலம் வட்டம் நைனார்பாளையம், செஞ்சி வட்டம் பணைமலைபேட்டை, விழுப்புரம் வட்டம் காணை, திண்டிவனம் வட்டம் தீவனூர், திருக்கோவிலூர் வட்டம் சித்தலிங்கமடம், கண்டாட்சிபுரம் வட்டம் கண்டாட்சிபுரம், சங்கராபுரம் வட்டம் தேவபாண்டலம் ஆகிய பகுதிகளில் நேரடி கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் நெல் சன்ன இரக நெல்லுக்கு ஆதார விலையாக குவின்டால் ஒன்றுக்கு ரூ.1660/- மோட்டா இரக நெல்லுக்கு குவின்டால் ஒன்றுக்கு ரூ.1600/- விலை நிர்ணயம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகிறது.

மேலும் மாவட்ட ஆட்சியரின் முயற்சியினால் விவசாயிகளின் இருப்பிடத்திற்கே சென்று நெல்லினை கொள்முதல் செய்திட நடமாடும் நெல் நேரடி கொள்முதல் நிலையங்கள் தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) மூலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த நடமாடும் கொள்முதல் நிலையங்களிலும் அரசு நிர்ணயித்த ஆதார விலையே கொடுக்கப்படும் என்பதை தெரிவிப்பதோடு விழுப்புரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்திட மாவட்ட ஆட்சியரால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாடு அரசு வேளாண்மை விற்பனைக்குழு மூலம் 19 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு பருவ மழையின் காரணமாக அதிகப்படியான விளைச்சல் ஏற்பட்டு அதிகப்படியான விளைபொருட்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு தினந்தோறும் கொண்டு வரப்படுகிறது. அதிகப்படியான விளைப்பொருட்கள் வருகின்றபோது பொருட்களின் விலை குறைவடைகிறது.

எனவே விவசாயிகள் தங்களுக்கு ஏற்ற விலை கிடைத்திட, விளைபொருட்களின் விலை வீழ்ச்சியான நேரங்களில் விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூட குடோன்களில் இருப்பு வைத்து அதன் மதிப்பில் 75% வரை பொருளீட்டு முன்பணமாக பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் விளைபொருட்களை குடோன்களில் 15 நாட்கள் வரை இலவசமாக இருப்பு வைத்து விற்பனை செய்து கொள்ளலாம். விவசாயிகளுக்கு பொருளீட்டு முன்பணமாக நபர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.3,00,000/- வரை வழங்கப்படும்.

பொருளீட்டு முன்பணமாக வழங்கப்படும் தொகைக்கு 5% வட்டி வசூல் செய்யப்படும். விவசாயிகள் தங்களது விளைபொருட்களை அதிகபட்சமாக 180 நாட்கள் வரை இருப்பு வைத்துக்கொள்ளலாம். விளைபொருட்களின் விலை உயர்வான நேரங்களில் விளைபொருட்களை மீட்பு செய்து விற்பனை செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் அன்றாட விலை நிலவரத்தினை www.agmarknet.nic.in என்ற இணையதள முகவரியிலும் 04149-222231 என்ற தொலைபேசி மூலமும் தெரிந்து கொண்டு விளைபொருட்களை விற்பனைக்கு கொண்டு வர வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.